## மே - 12

**"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாக்குதலைத் தேவபக்தியோடே பூரணப்படுத்தக் கடவோம்." - 2கொரி 7 : 1**

இராஜ்ஜியத்தின் சுதந்தரராகப் போகிறதை எதிர்பார்க்கிறவர்களில், எத்தனைபேர் தங்களில் துர்குணம், கபடம், மாயம், பொறாமை, தூஷணம், இப்படிப்பட்ட அசுசிகள் இருக்கிறதைக் காண்கிறார்கள்! போராடுவதற்கு மாம்சத்தின் இந்த பெலவீனங்களில் எல்லாம் இல்லாவிட்டாலும், ஒவ்வொருவருக்கும், விசேஷமாக கிறிஸ்தவ ஊழியத்தில் பிரவேசித்த ஆரம்பத்தில், இவைகளில் ஏதோ சில இருக்கின்றன என்று சொல்லுவது நம்பத்தக்கது. இவைகள் எல்லாவற்றையும் நீக்கிப்போட எவ்வளவு கவனமாக நாம் நாட வேண்டியவர்களாயிருக்கிறோம்.! ஒவ்வொருவனும் ஜீவியத்தின் ஒவ்வொரு கிரியையையும், ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வொரு எண்ணத்தையும், மாத்திரமல்லாமல் கூடுதலாக அதனுடைய வார்த்தைகள் எண்ணங்கள், கிரியைகள் இவைகளுக்கு ஆதரவாக இருக்கிற ஒவ்வொரு நோக்கத்தையும் அவைகள் எவ்வளவு கர்த்தருக்கு அதிகமதிகமாக பிரியமாயிருக்கத்தக்கதாகவும் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாகச் சோதனை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.! **-Z '03, 408 (R 3265)**

புகையிலை, லாகிரிவஸ்து, மதுபான பழக்கங்கள், துன்மார்க்கம், போஜனப்பிரியம், சரீர அசுசி முதலியவை "மாம்சத்திலுண்டான அசுசி" இவைகள் வேரூன்றி சரீரத்தினால் வெளியாக்கப்படும் கலகங்களைக் குறிக்கிறது. ஆவியினால் உண்டாகிற அசுசி, கோபம், பகை, துர்குணம், பொல்லாத சம்சயம், கபடம், பேராசை, அவநம்பிக்கை, நம்பிக்கையின்மை, பெருமை போன்றவை வேரூன்றி மனதினால் வெளிப்படுத்தப்படுகிற கலகங்களைக் குறிக்கிறது. ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கை கொண்ட வாக்குத்தத்தங்களே மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசி நீங்க நம்மை சுத்திகரிப்பதற்காக தெய்வீக நியமனம் பெற்ற கருவி. இந்தச் சுத்திகரிப்பைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவுள்ள மிகச்சிறந்தமுறை என்னவென்றால், நாம் தேவனிடத்தில் பயபக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அதனால் நாம் நமது பிரதிஷ்டையை பூர்த்தி செய்கிறோம். **- P '32, 48.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

2கொரி 6:17,18; ஆதி 22:16-18; சங் 51:10; யோவா 15:3; 1யோவா 1:7-9; கலா 5:19-21; எபே 4:17-32; 5:26; கொலோ 3:5-9; ரோம 8:1-14; 12:2,9-21; கலா 5:22-28; 6:7-10; கொலோ 3:10-17; 1தெச 5:11-22.

**கோபுர வாசிப்பு: Z '15, 230 (R 5737).**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் இந்த வசனத்தின் போதனையை உணர்ந்துகொள்ள நாடினேனா? எப்படி? பலன் என்ன?